உ

ஸ்ரீசெல்வகணபதி துணை.

சீர்காழி தாலுக்கா

# கீரங்குடி கொண்ணகாட்டுபடுகை

# ஸ்ரீ குடவரசி அம்பாள்



# ஸ்தோத்திர பாடல்கள்.

வெளியிடுவோர்:

**S. நடேசசிவாச்சாரியார்,**

திருக்கோலக்கா, சீர்காழி.

8 - JAN 1975
SIRKALI

மகரஸ்தே திவாநாதே
மாகசுந்தே ப்ருகோர் தினே.
பௌர்ணி மாயாஞ்சயேபக்தியா:
பூஜயந்து கடேஸ்வரீ.

* * *

விருத்தம்.

தித்திக்கும் செந்த மிழால் நித்தமுனைப்
பாடதிவ்ய வரம் தருவாய் அம்மா
எத்திக்கும் புகழ் மணக்கும் ஈஸ்வரியே
ஞானசித்தி யெல்லாம் தரும்செல்வி குடவரசியே.

---

அருள் நாடிவரு வோர்க்கு
அருளினை வழங்குவாய்
பொருள் தேடிவரு வோர்க்கு
பொருளினைவாரி கொடுப்பாய்
இருள் நீங்கவேண்டு வோர்க்கு
பேரொளி காட்டுவாய்
ஏதும் கேளா எனக்கு
எல்லாம் நீதருவாய்.

## இராகம் : ஹம்ஸத்வனி.

### பல்லவி.

அருள் புரிவாய் அம்பிகையே நீ ..
கரங்குவித்து நின்றேன் குடவரசி தாயே (அருள்)

### அனுபல்லவி.

நீயே துணையென்று நம்பி வந்தேன் - என்குறை
தீர்க்க வருவாயே ஹம்ஸத்வனியே (அருள்)

### சரணம்.

பொருள்தரும் மகிழ்வே பெரிதென நினைத்தேன்
பொய்சூது வஞ்சத்தை நெஞ்சிற்குள் அடைத்தேன்
இருள் என்னும் உலகில் நீஒளிவிளக்கு - என்மன
இருளை உடன் நீவிலக்கு
கருணை மனத்தால் கடைக்கண் பாராய்
கருத்தினில் அமர்ந்திட சிரிப்புடன் வாராய் (அருள்)



அம்பாபகவதி அனைத்துலக நாயகி என்பால் என்றும்
அன்பினை சொரியும் அமுதவல்லி
இம்மை மறுமை இரண்டிற்கு ஏற்ற நலங்கள்
எல்லாம் எப்பொழுதும் தருபவள் நீதான்
உம்மை பிரியா உம்முறவு மறவா உள்ளத்தழகை
உவந்தே அளிக்கும் இன்சுவையே
எம்மையும் பொருட்டாக எண்ணி என்குறை
தீர்த்த என்னிதயத்தாய் குடவரசியே.

இராகம் : ஆனந்தபைரவி

பல்லவி.

எங்கள் குலதெய்வம் குடவரசி - அவள்
அகங்காரம் அழிக்கும் தனியரசி (எங்கள்)

அனுபல்லவி.

தினந்தோறும் திருப்பாதம் துதிப்பதில்லை எனினும்
தீமையெல்லாம் தீர்த்திடவே மறப்பதில்லை (எங்கள்)

சரணம்.

கணந்தோறும் மாரியவள் காத்திருப்பாள் எமை
காலமெல்லாம் தாய்போல் பார்த்திருப்பாள்
மலர்த்தூவி வாயார பாடிடுவோம் நம்
மனக்கோவில் தன்னில் வைத்து மகிழ்ந்திடுவோம்
(எங்கள்)

## விருத்தம் - இராகமாலிகை

### மோகனம்

சீர்தருங் குழலழக மீதில் அணிமகுடமும்
திவ்ய முழுமதி வதனமும்
திகழ்பெருக வாணி பொன்னேலை மூக்குத்தியும்
திலகமணி நுதலி னழகும்

### சண்முகபிரியா

ஏர்தரும் திருநயன பார்வையும் தன்
மார்பிலிட்ட ரத்ன பரணமும்
எழில்பெற்ற மின்னலிடை பட்டு ஒட்டியாணமும்
சதுர்கரம் பொன் வளையலும்

### நீலாம்பரி

தார்தரும் நெடிய பதமீதிற் சதங்கையும்
தண்டை பாடக கொலுசுடன்
தரணிதனில் வலம்வரும் உன் புதுமை
கண்டுமே சாற்ற எவர்க்கும் எளிதோ

### பாகேஸ்ரீ

ஆர்தரும் சோலைசூழ் கீரங்குடி கொண்ண
காட்டுபடுகை தன்னில் வளர்
அமிர்த குணசாலி அடியிணைகளை
போற்றவே கிருபை தந்தாளும் குடவரசி
உமையே.

ரகுபதி ராகவ ராஜாராம் - மெட்டு.

பாலய பாலய குடவரசி
பரம க்ருபாகரி குடவரசி
பங்கஜ ஸதனே குடவரசி
பரிபூர்ண கடாக்ஷி குடவரசி

அச்சுத ஸோதரி குடவரசி
ஆனந்த தாயினி குடவரசி
இந்து கலாதரே குடவரசி
ஈப்ஸித வரதே குடவரசி

உதார கீர்த்தே குடவரசி
ஊர்ஜித சாஸனே குடவரசி
ரிஷிகண வந்தித குடவரசி
க்லீங்கார ரூபே குடவரசி

ஏகாக்ஷர ப்ரியே குடவரசி
ஐச்வர்ய பலதே குடவரசி
ஒட்டியாண பூஷிதே குடவரசி
ஓங்கார நிலயே குடவரசி

நித்ய கல்யாணி குடவரசி
நீதி விதாயினி குடவரசீ
துக்க விநாசினி குடவரசி
துரித நிவாரிணி குடவரசி

(பாலய பாலய குடவரசி)

பூமியில் மானிட ஜென்மம் - மெட்டு

குங்கும அர்ச்சனை செய்தவர்க்கு அம்பாள்
கோடிக் கோடி பொன்னை கொடுப்பவளாம்.

பாலால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
பல ஜன்ம பாவத்தை போக்குபவளாம்.

தேனால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
திவ்ய தரிசனம் கொடுப்பவளாம்.

கனியால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
கண் முன்னே வந்து நிற்பவளாம்.

சந்தனத்தால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
சர்வாபீஷ்டங்களும் கொடுப்பவளாம்.

தீராத வினைதனைத் தீர்ப்பவளாம் தேவி
திருவடி சரணம் சரணம் அம்மா.

பவபய ஹாரிணி அம்பா பவானியே
துக்க நிவாரிணி துர்க்கே ஜெயஜெய.

கால விநாசினி காளி ஜெயஜெய
சக்தி ஸ்வரூபிணி மாதாகி ஜெயஜெய.

சரணம் சரணம் குடவரசி
சங்கடம் தீர்ப்பாள் குடவரசி
அன்பின் வடிவாம் குடவரசி
ஆக்கம் அருள்வாள் குடவரசி

இன்னல் தீர்ப்பாள் குடவரசி
ஈடேற்றுபவள் குடவரசி
உமையாள் வடிவே குடவரசி
ஊக்கம் தருவாள் குடவரசி

எங்கள் தெய்வம் குடவரசி
ஏற்றம் அருள்வாள் குடவரசி
ஐங்கரன் தாயே குடவரசி
ஒப்பில்லா தெய்வம் குடவரசி

ஓங்கார பொருளே குடவரசி
ஔடதம் போன்றவள் குடவரசி
சரணம் சரணம் குடவரசி
சங்கடம் தீர்ப்பாள் குடவரசி.

குமரன் பிரஸ், சீர்காழி.